# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யுங்கள்



## வெளிநாட்டு வேலை ஒன்றில் ஈடுபட்டிருந்து நாடு திரும்பும் உங்களுக்காக தொழில் முயற்சியை மேம்படுத்தும் திட்டம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலை ஒன்றில் ஈடுபட்டிருந்து நாடு திரும்பி, வர்த்தகம் ஒன்றில் ஈடுபட்டிருக்கும் புலம்பெயர் பணியாளர்களின் வர்த்தகம்/ கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு, மற்றும் வெளிநாட்டு வேலையில் ஈடுபட்டு ஈட்டிய பணத்தில் வர்த்தகம்/ கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு நிதி அடிப்படையில் புலம்பெயர் பணியாளர்களை வலுவூட்டுவதற்காக பிரதேச செயலாளர் பிரிவு அளவில் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இந்நாட்டுக்கு வந்து வர்த்தகம் அல்லது கைத்தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு தேவையான வெளிநாட்டு தொழிலாளர்களினால் தமது வர்த்தகம்/ கைத்தொழிலுக்காக தயாரிக்கப்பட்ட திட்ட முன்மொழிவு பிரதேச செயலாளர் அலுவலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் (வெளிநாட்டு வேலைவாய்ப்பு) மூலம் குறித்த மாகாண அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்பதோடு, முன்மொழியப்பட்ட சாத்தியக்கூற்று மதிப்பீட்டு குழு மூலம் தகுதியுடைய பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

### நிதி உதவிக் கோரலுக்கு விண்ணப்பதாரர் பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்.

- பணியகத்தில் பதிவைப் பெற்று குறைந்தது 02 ஆண்டுகள் வெளிநாட்டு வேலை ஒன்றில் ஈடுபட்டிருந்து மீண்டும் இலங்கைக்கு வந்து வர்த்தகம்/ கைத்தொழில் ஒன்றை தற்போது மேற்கொண்டு வரும் அல்லது புதிதாக ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருக்கும் புலம்பெயர் பணியாளர்களாக இருத்தல் வேண்டும்.

### சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

- புலம்பெயர் பணியாளரின் கடவுச்சீட்டின் புகைப்படத்துடனான பக்கம் மற்றும் மீண்டும் திரும்பிய திகதியை குறிப்பிடும் குடிவரவு குடியகல்வு முத்திரையை பதிவு செய்துள்ள பக்கங்களின் நிழல் பிரதிகள்.
- தேசிய அடையாள அட்டையின் நிழல் பிரதி.
- வர்த்தகம்/ கைத்தொழிலின் மாதிரித் திட்டம்.
- விரிவான வர்த்தக முன்மொழிவு/ வர்த்தக திட்டத்தில் புதிய வர்த்தகம் ஒன்றை ஆரம்பித்தல் அல்லது இருக்கின்ற வர்த்தகம் ஒன்றை மேம்படுத்த வேண்டியதாக இருத்தல் வேண்டும்.

- சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் வர்த்தக முன்மொழிவுகளை மதிப்பிடும்போது உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட வர்த்தகத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- வர்த்தக முன்மொழிவுகளை மதிப்பிடும்போது வர்த்தகம் ஊடாக உருவாகின்ற நேரடி மற்றும் மறைமுகமான தொழில் வாய்ப்பு எண்ணிக்கை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படும்.

**விண்ணப்பதாரரினால் தயாரிக்கப்படும் திட்ட முன்மொழிவு பிரதேச செயலாளர் அலுவலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு (வெளிநாட்டு வேலைவாய்ப்பு) அனுப்ப வேண்டும்.**

**விண்ணப்பதாரரினால் தயாரிக்கப்படும் திட்ட முன்மொழிவு பிரதேச செயலாளர் அலுவலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு (வெளிநாட்டு வேலைவாய்ப்பு) அனுப்ப வேண்டும்.**

**புதிய வர்த்தகத்தை ஆரம்பிப்பதற்கு அல்லது இருக்கின்ற வர்த்தகத்தை வரிவுபடுத்துவதற்கு முன்மொழிவின் சாத்தியக்கூற்று மதிப்பீட்டு அடிப்படையில் கீழ் குறிப்பிடப்பட்ட நிதி வழங்கல்கள் மேற்கொள்ளப்படும்.**

| நாடு திரும்பிய புலம்பெயர் பணியாளர்களின் வர்த்தகம்/ கைத்தொழிலுக்காக எதிர்பார்க்கும் அல்லது தற்போது மேற்கொண்டிருக்கும் முதலீடு | பணியகத்தின் மூலம் ஒரு தொழில் முயற்சியாளருக்கு வழங்கும் தொகை | ஒரு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் ஒதுக்கப்பட்ட கொடுப்பனவு எண்ணிக்கை |
|---|---|---|
| ரூபா 200,000 – 500,000 | ரூபா 250,000 | 3 |
| ரூபா 500,001 – 1,000,000 | ரூபா 500,000 | 1 |
| ரூபா 1,000,000 இற்கு மேல் | ரூபா 1,000,000 | 1 |

**விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி**
**2025.02.28**

ஒருங்கிணைப்பு மற்றும் மேலதிக விபரங்களுக்கு _

- மெஹுவரபியச, மீள் ஒருங்கிணைத்தல் பிரிவு – 011 2365673
- பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் தொழில்முயற்சி உதவி கருமபீடம் - 011 2251688
- 24 மணி நேர அவசர அழைப்பு பிரிவு – 1989
- இணையதளம் – www.slbfe.lk

இது தொடர்பில் மேலதிக விபரங்களை பணியகத்தின் மாகாண புலம்பெயர் வள நிலையத்தின் மூலமும் பெற முடியும்.

| | | |
|---|---|---|
| மத்துகம – 034 2247188 | ஹாலியெல – 055 2294118 | அநுராதபுரம் – 025 2225290 |
| இரத்தினபுரி – 045 2223077 | அம்பாறை – 063 2223413 | வவுனியா – 024 2228608 |
| கண்டி – 081 2227012 | குருநாகல் – 037 2223661 | தங்கல்லை – 047 22414477 |

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்**
அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்